2010 மே 10]

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று *2007-2008* ஆம் ஆண்டில் *25* புதிய விடுதிகளையும், *2008-2009* ஆம் ஆண்டில் *26* புதிய விடுதிகளையும், அதைப்போல நடப்பாண்டில் *25* புதிய விடுதிகளையும் தொடங்குவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைமீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் *10-15*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் *158*, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

158—

நவினப்படுத்துதல்

***108667—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணையை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அரசாணை எண் *129*, வேளாண்மைத் துறை, நாள் *19-3-2008*-இல் *95* இலட்சம் ரூபாய் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, ஏற்கெனவே உள்ள *2,400* சதுர மீட்டர் பரப்பளவில் உள்ள இரண்டு சினை மீன் குளங்களைப் பழுது நீக்கிப் புனரமைப்பு செய்து, நடப்பாண்டில் *60* இலட்சம் ரூபாய் செலவில் கட்டுமானப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, தற்போது மீன் குஞ்சு உற்பத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், *35* இலட்சம் ரூபாய் செலவில், அழிந்துவரும் நாட்டு மீன்களான கல்பாசு, சேல்கெண்டை மற்றும் வெண்கெண்டை போன்ற மீன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 10

இனங்களைப் பாதுகாத்து வளர்த்திட ஏதுவாக, 1,000 சதுர மீட்டர் பரப்பளவில் 5 புதிய வளர்ப்பிடங்களின் கட்டுமானப் பணிகள் முடிவுற்று தற்போது சினை மீன்கள் இருப்பு செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வகைகளிலேயே மேட்டூர் அணை மீன்கள்தான் சுவை மிகுந்தவை என்று கொல்கத்தா விற்பனை நிலையங்களிலேகூட பாராட்டக்கூடிய அளவிற்கு, சுவை மிகுந்த மீன்களாக எல்லோரும் விரும்பிச் சாப்பிடக்கூடிய மீன்களாக இருந்து வருகின்றன. ஆகவே, அணைப் பகுதிகளில் மீன்களை அதிக அளவில் உற்பத்தி செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல், நம்முடைய மாநிலம் முழுவதும் மீன் உற்பத்திக்கான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு நல்ல சாத்தியக்கூறுகள் இருக்கின்ற காரணத்தினாலே, இன்னும் அதிக அளவிற்கு மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்கான பண்ணையை விரிவாக்கம் செய்ய வேண்டும். அதேநேரத்தில், அங்கே மீன்களை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கான ஆராய்ச்சி மையம் ஒன்றைத் தொடங்க வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரி வருகிறோம். ஆகவே, அந்த அடிப்படையிலே, இப்போது அமைச்சர் அவர்கள் அறிவித்த பதிலில் அங்கே தொட்டிகள் கட்டப்பட்டு, செயல்பாட்டிற்கு வர இருக்கின்றன என்று சொன்னாலும்கூட, அங்கே சாத்தியக்கூறுகள் இருக்கின்ற காரணத்தால், அதிக அளவில் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்கான பண்ணையை விரிவாக்கம் செய்து, ஆராய்ச்சி மையமும் நடப்பாண்டிலே தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. மணி அவர்கள் எப்போது பேசினாலும், மேட்டூர் மீன்கள் சுவை மிகுந்தவையாக இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அவர் பதில்*

2010 மே 10]

சொல்கின்ற நேரத்தில், எனக்குப் பக்கத்தில் அமர்ந்திருக்கின்ற பால் வளத் துறை அமைச்சர் அவர்கள், திருவாரூரிலே மீன்கள் சுவையாக இருக்கின்றன என்று சொல்கிறார்கள். இந்தப் பக்கத்திலே அமர்ந்திருக்கின்ற ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள், இராமநாதபுரம் மீன்கள் சுவையாக இருக்கின்றன என்று சொல்கிறார்கள். சமைப்பதைப் பொறுத்து மீன்கள் மிகுந்த சுவையாக இருக்கும் என்பதனை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற மேட்டூர் மீன் குஞ்சு உற்பத்தி நிலையத்தில் நுண் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு, நாற்றங்கால்களில் வளர்த்தெடுக்கப்பட்டு, தனியார் மற்றும் மீன்வளத் துறையில் உள்ள நீர் நிலைகளுக்கு மீன் விரலிகளாக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மேட்டூர் மீன் குஞ்சு உற்பத்தி நிலையத்தில் கட்லா, ரோகு, மிர்கால், சாதா கெண்டை, புல்கெண்டை ஆகிய மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. மேட்டூர் மீன் பண்ணையில் நாற்றங்கால்கள் மற்றும் சினை மீன் குளங்கள் அமைக்கப்பட்டு நல்ல முறையிலே பராமரிக்கப்பட்டு வருகின்றன. இரண்டு சினை மீன் குளங்கள் பழுது நீக்கி புனரமைப்பு செய்யப்பட்டு, அழிந்து வரும் நாட்டு மீன்களான கல்பாசு, சேல்கெண்டை மற்றும் வெண்கெண்டை போன்ற மீன் இனங்களைப் பாதுகாத்து வளர்த்திட, ஐந்து புதிய வளர்ப்பிடங்களில் கட்டுமானப் பணிகள் முடிவுற்று தற்போது இருப்பு செய்யப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம், தமிழக அரசின் பகுதி-2 திட்டம், தேசிய மீன்வள அபிவிருத்திக் கழகம் மற்றும் நீர் வள, நில வளத் திட்டம் ஆகியவை மூலமாகத் தமிழகத்தின் மீன்வளத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மீன் குஞ்சு வளர்ப்பிடங்கள் சீர் செய்யப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற மேட்டூர் ஆராய்ச்சிப் பண்ணையில் நம்முடைய மீன்வளத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள இடங்களில் வருங்காலங்களில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்கேற்ப அதிகமான இடங்களில் மீன் வளர்ப்பு கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என்பதனை நான் உங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2010 மே 10

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.*

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலுக்கு மிக்க நன்றி. இங்கு சுவையைப் பற்றிக்கூட கூறினார்கள். சுவை என்பது அந்த ஆற்றினுடைய நீரைப் பொறுத்தும், அங்கு இருக்கிற அந்த மண்ணின் தன்மையைப் பொறுத்தும் சுவை மிகுதியாக இருக்கும் என்று சொல்கிறார்கள். மேட்டூர் அணைத் தண்ணீர்தான் திருவாரூருக்குப் போகிறது. அதனால்தான் அங்கேயும் சுவை இருக்கிறது. (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் உட்பட, எல்லா அமைச்சர்களுக்கும், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சுவை மிகுந்த மேட்டூர் அணை மீன் வழங்கப்படும் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், இங்கே அமைச்சர் அவர்கள் விளக்கமாக குறிப்பிட்டுச் சொன்னார்கள். மீன் உற்பத்திக்கான சாத்தியக்கூறுகள் அங்கே இருக்கின்றன. எல்லா இடங்களிலும் மீன் குஞ்சு விற்பனை செய்வதற்கான தேவை இருக்கின்ற காரணத்தினால்தான் ஆராய்ச்சி மையம் வேண்டுமென்று கேட்கிறோம். அதேநேரத்தில் பிடிக்கும் மீன்கள் கெட்டுப்போகாமல், அழுகிப் போகாமல் பதப்படுத்துவதற்காக, பக்குவப்படுத்துவதற்காக பனிக்கட்டித் தொழிற்சாலை, Ice Factory ஒன்று வேண்டுமென்று நீண்டநாட்களாக கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே, அங்கு பனிக்கட்டித் தொழிற்சாலை வரவேண்டும். அதேநேரத்தில் ஆராய்ச்சி மையம் தொடங்கப்படுமா என்பதையும் தங்கள்வாயிலாக மீண்டும் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. ஜி.கே. மணி

2010 மே 10]

அவர்கள் மேட்டூரில் மீன்களைப் பாதுகாக்கின்ற வகையில் ஒரு குளிர்ப் பதன அறை வேண்டுமென்று ஏற்கெனவே கேட்டிருக்கின்றார். அரசு அதைப்பற்றி பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

159—

பால் பதப்படுத்துதல்

***102584—திரு. போ. சின்னப்பன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளத்தில் பால் பதப்படுத்தும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளம் தொகுதியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஏதும் தற்போது இயங்காத காரணத்தினால், விளாத்திகுளத்தில் பால் பதப்படுத்தும் நிலையம் அமைக்க தற்போது வாய்ப்பு ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் நகரம் தாலுகா தலைநகரமாகும். இந்த தாலுகாவைச் சுற்றி 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இந்தப் பகுதியில் பரவலாக மாடுகளை வளர்த்து பெருமளவில் பால் உற்பத்தி செய்கின்றார்கள். இங்கு அதிகமான பால் உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, விளாத்திகுளத்தில் பால் பதப்படுத்தும் நிலையம் அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS